


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ டிசம்பர். 09, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 65 ❖ ரூ.10

### தமிழகத்தில் அறிவிக்கப்பட்ட திட்டப்பணிகள் மாவட்ட வாரியாக

# நேரில் ஆய்வு!

## இயற்கை, வீரம், ஆன்மிகம், வேளாண்மைக்கு புகழ்பெற்றது தென்காசி!
## 1.3 லட்சம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கி முதல்வர் பேச்சு




தென்காசி, டிச.09-

தமிழகத்தில் மாவட்ட வாரியாக அறிவிக்கப்பட்ட திட்டப்பணிகளை நேரில் நான் ஆய்வு செய்ய இருக்கிறேன் என்று அதிரடி அறிவிப்பை வெளியிட்ட பின். இயற்கை, வீரம், ஆன்மிகம், வேளாண்மைக்கு புகழ்பெற்றது தென்காசி என்றும், முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார்.

தென்காசி மாவட்டத்தில் 1லட்சத்து 3,508 பயனாளிகளுக்கு ரூ.182.56 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (டிச.08ம் தேதி) வழங்கி பேசியதாவது:

இயற்கைக்கும், வீரத்துக்கும், ஆன்மிகத்துக்கும், வேளாண்மைக்கும் புகழ்பெற்ற தென்காசிக்கு வந்ததில் பெருமை கொள்கிறேன். சங்கரன்கோயில் புளியங்குடி தேசிய நெடுஞ்சாலை மேம்படுத்தப்படும். புளியங்குடியில் புதிய விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும். ஆலங்குளத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனை மையம் அமைக்கப்படும்.

தென்காசி மக்களின் பிரதான கோரிக்கையான ஜம்பு நதி திட்டம் கடந்த ஆட்சியில் முறையாக அனுமதி வழங்கப்படாததால் திட்டம் தாமதமானது. தற்போது வனத்துறை அனுமதிக்கு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. முறையாக ஜம்புநதி திட்டபணிகள் விரைவில் தொடங்கும். ஆட்சிக்கு வந்து 19 மாதங்களில் பல்வேறு சாதனைகள் செய்யப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டத்துக்கு இல்லம் தேடி கல்வித் திட்டத்தின் கீழ் 50,390 மாணவர்கள் பலன் பெற்றுள்ளனர். உங்கள் முதல்வர் திட்டத்தின் கீழ் 11,490 மனுக்கள் பெறப்பட்டு 11,400 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. வினைதீர்த்தநாடார்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 3ம் வகுப்பு படிக்கும் சிறுமி ஆராதனா வைத்த கோரிக்கையை ஏற்று ரூ.35.50 லட்சம் மதிப்பில் அரசுப்பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டப்படும். குழந்தைகளும் என் மீது நம்பிக்கை வைத்து கோரிக்கை கடிதம் அனுப்புகின்றனர். மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் எரிச்சலால் கேட்கும் கேள்விகளுக்கு நான் பதில் அளிக்க விரும்பவில்லை. என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு நாங்கள் உண்மையாக இருக்கிறோம்.

தமிழக அரசால் குற்றால சாரல் விழா ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. அருவிகள்., அணைகள் உள்ளமாவட்டம், வீரத்தின் எடுத்துக்காட்டான பூலித்தேவன் பிறந்த விளை நிலம். இலத்தூர் ஏரி ரூ.10 கோடி செலவில் சுற்றுலா மையமாகும். தென்காசி மாவட்டத்துக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றித் தருவோம். இந்தியாவிலேயே சிறந்த மாநிலம் தமிழகம் என்பதை சாதித்துக்காட்டுவேன். இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

தென்காசி மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் வரவேற்றார். தலைமை பொறுப்பு ஏற்றுள்ள தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன், அமைச்சர்கள் கே.என். நேரு, பெரியசாமி, மாநில சிறுபான்மையினர் நல ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், முன்னாள் பேரவை தலைவர் ஆவுடையப்பன், தென்காசி எம்.பி., தனுஷ் எம் குமார், எம்.எல்.ஏ.,க்கள் தென்காசி எஸ்.பழனி நாடார், சங்கரன்கோவில் ராஜா, வாசுதேவநல்லூர் சதன் திருமலை குமார், தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க., செயலாளர் வழக்கறிஞர் சிவபத்மநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர் செல்லத்துரை, பொதுக்குழு உறுப்பினர் சிவநல்லூர் சாமித்துரை, புளியங்குடி நகர் மன்ற தலைவர் விஜயா சௌந்தரபாண்டியன், கடையநல்லூர் தி.மு.க., நகர செயலாளர் அப்பாஸ், புளியங்குடி தி.மு.க., நகர செயலாளர் அந்தோணிசாமி, புன்னையாபுரம் ஒன்றிய கவுன்சிலர் மணிகண்டன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட கட்சி முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர். முடிவில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயினுலாப்தீன் நன்றி கூறினார்.

முதல்வர் வருகை முன்னிட்டு, தென்மண்டல போலீஸ் ஐ.ஜி., அஸ்ரா கார்க் தலைமையில் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, ராமநாதபுரம், குமரி உள்பட 7 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 3,500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



▶ தலைமை செயலகத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில், மின்னணு தேசிய வேளாண் சந்தை செயல்பாடுகள் குறித்த கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தியாளர் மற்றும் அரசு செயலாளர் சமயமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக துறை இயக்குனர் நடராஜன், மாநில வர்த்தக சங்கத் தலைவர் விக்ரமராஜா, தலைமை நிலைய செயலாளர் ராஜ்குமார், கூட்டுறவு செயலாளர் மணி, கடலூர் மாவட்ட மண்டல தலைவர் சண்முகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



▶ சென்னை தலைமை செயலகத்தில் செய்திதுறை அமைச்சர் சாமிநாதன் மயிலாடுதுறை பி.ஆர்.ஓ., அலுவலக பயன்பாட்டிற்கான வாகன சாவியை பி.ஆர்.ஓ., ரவிசந்திரனிடம் வழங்கினார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் ஜெயசீலன், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் சரவணன் உடனிருந்தனர்.

# குஜராத்தில் அசுரபல வெற்றியால் மீண்டும் பா.ஜ., ஆட்சி இமாச்சல பிரதேசத்தைக் கைப்பற்றி காங்கிரஸ் அபாரம்!

அகமதாபாத், டிச.09-

குஜராத்தில் வரலாற்று வெற்றியுடன் மீண்டும் பா.ஜ.க., ஆட்சியைப் பிடித்துள்ளது. இமாச்சலப் பிரதேசத்தை காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. 2022ம் ஆண்டின் கடைசித்தேர்தலாக அமைந்துவிட்ட குஜராத் சட்டப்பேரவை, இமாச்சலப் சட்டப்பேரவை தேர்தலில் பா.ஜ.,வும், காங்கிரஸும் தலா ஒரு வெற்றியோடு நிறைவு செய்துள்ளன.





குஜராத் சட்டப்பேரவைத் தேர்தலில் ஆளும் பா.ஜ., 157 தொகுதிகளை கைப்பற்றி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்யும் சூழலில் காங்கிரஸ் கட்சி 17 தொகுதிகளில் முன்னிலை வகித்தாலும் இது அக்கட்சிக்கு பலத்த பின்னடைவாக உள்ளது. ஆம்-ஆத்மி கட்சி 5 தொகுதிகளில் முன்னிலை பெற்று அம்மாநிலத்தில் தனது தடம் பதித்து தேசிய அரசியலிலும் கவனம் பெற்றுள்ளது. மொத்தமுள்ள 182 தொகுதிகளில் பெரும்பான்மைக்கு 92 இடங்கள் தேவை என்ற நிலையில், பா.ஜ., வரலாற்று வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

கடந்த 2017 தேர்தலுடன் ஒப்பிட்டால் பா.ஜ., இம்முறை சுமார் 60 இடங்களைக் கூடுதலாக வசப்படுத்தியுள்ளது. காங்கிரஸ் கட்சியோ 50-க்கும் மேற்பட்ட இடங்களை இழந்துள்ளது. சுமார் 5 தொகுதிகள் என்றளவில் ஆம்-ஆத்மி தனது வெற்றிக் கணக்கை குஜராத் மண்ணில் தொடங்கியுள்ளது கவனிக்கத்தக்கது. இதனிடையே, குஜராத் முதல்வராக பூபேந்திர படேல் வரும் 12ம் தேதி பதவியேற்பார் என பா.ஜ., அறிவித்துள்ளது.

**இமாச்சல் வெற்றியால் காங்கிரஸுக்கு ஊக்கம்: ஆனந்த் ஷர்மா நம்பிக்கை!**

இமாச்சல பிரதேசத்தில் மொத்தமுள்ள 68 தொகுதிகளில் காங்கிரஸ் 40 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. பா.ஜ., 25 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது. சுயேட்சைகள் 3 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

தேர்தல் வெற்றியை அடுத்து செய்தியாளர்களிடம் பேசிய ஆனந்த் ஷர்மா, "இமாச்சலப் பிரதேச தேர்தல் வெற்றி அடுத்து வரக் கூடிய ராஜஸ்தான், சத்தீஸ்கர் சட்டப்பேரவைத் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கான ஊக்கத்தை காங்கிரஸ் கட்சிக்கு அளித்துள்ளது. அந்தச் செய்தியைத்தான் இந்த முடிவுகள் கொடுக்கின்றன. இமாச்சலப் பிரதேசத்தில் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று அரசு ஊழியர்கள் வலியுறுத்தினர். அதை ஏற்று, காங்கிரஸ் வெற்றி பெற்றால் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவோம் என வாக்குறுதி அளித்தோம். இதே கோரிக்கையை பிற மாநில அரசு ஊழியர்களும் வலியுறுத்தி வருகின்றனர்," என்றார்.

இமாச்சல பிரதேசத்தில் ஆட்சி அமைக்கும் வாய்ப்பை பா.ஜ., இழந்ததை அடுத்து, ராஜினாமா கடிதத்தை விரைவில் கவர்னரிடம் வழங்க இருப்பதாக முதல்வர் ஜெய்ராம் தாகூர் தெரிவித்துள்ளார். மக்கள் அளித்துள்ள தீர்ப்பை மதிப்பதாகக் குறிப்பிட்டுள்ள ஜெய்ராம் தாகூர், பிரதமருக்கும் பா.ஜ.,வின் பிற தேசிய தலைவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகக் கூறியுள்ளார். அரசியலைக் கடந்து இமாச்சலப் பிரதேசத்தின் வளர்ச்சிக்காக பாடுபடுவோம் என தெரிவித்துள்ள அவர், தேர்தல் தோல்வி குறித்து ஆராய்வோம் என்றும் மேம்படுத்திக் கொள்வோம் என்றும் தெரிவித்துள்ளார்.


# சர்வதேச சிலைக்கடத்தல் கூட்டாளி தீனதயாளன் சென்னையில் உயிரிழப்பு!

சென்னை, டிச.09-

சென்னை ஆழ்வார்பேட்டையில் வசித்து வந்த சிலைக்கடத்தல் மன்னன் தீனதயாளன் உயிரிழந்தார். கடந்த இரண்டாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த தீனதயாளன் நேற்று உயிரிழந்தார். அவருக்கு வயது 83. கலைப்பொருட்கள் விற்பனை மையம் என்ற போர்வையில் மறைமுகமாக சிலைக்கடத்தல் வேலைகளை செய்து வந்த கும்பலில் முக்கியமானவர் தீனதயாளன்.

சர்வதேச சிலைக் கடத்தல் மன்னன் சுபாஷ் கபூரின் கூட்டாளியாக திகழ்ந்தஇவர் தமிழகத்தின் பல்வேறு கோயில்களில் உள்ள சிலைகளை வெளிநாடுகளுக்கு கடத்தி விற்பனை செய்த வழக்கல் கைது செய்யப்பட்டவர்.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள தீனதயாளன் வீட்டில் ஏராளமான சிலைகளை சிலைகடத்தல் தடுப்புப் பிரிவு போலீசார் அப்போது பறிமுதல் செய்தனர். இதையடுத்து சிலை கடத்தல் வழக்கில் சிக்கிய தீனதயாளன் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வதை தடுக்க அவரது பாஸ்போர்ட் முடக்கப்பட்டது. பல்வேறு வழக்குகளில் அவரது பெயர் சேர்க்கப்பட்டிருந்தது. 2 ஆண்டு சிறைவாசத்திற்கு பிறகு சிலைக்கடத்தல் தடுப்புப்பிரிவு போலீசாரிடம் அப்ரூவராக மாறினார்.



சுபாஷ் கபூர், தினதயாளன் உள்ளிட்ட அவர்களது கூட்டாளிகள் இந்தியாவில் மட்டுமல்ல பல நாடுகளில் உள்ள தொன்மையான சிலைகளை கடத்தி விற்பனை செய்ததால் சரவதேச அளவில் தேடப்படும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு பல நாடுகளில் குற்றவாளிகள் பட்டியலில் உள்ளனர்.

இந்நிலையில் இந்தியா, பாகிஸ்தான், கம்போடியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து சர்வதேச அளவில் ரூ.900 கோடி மதிப்புள்ள 2 ஆயிரத்து 900 சிலைகள் மற்றும் கலைப்பொருட்களை கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு நியூயார்க் குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்தது.

இவ்வழக்கில், சுபாஷ் கபூர் பிரதான குற்றவாளி, கபூரின் கூட்டாளிகள் தீனதயாளன், சஞ்சீவி அசோகன், ரஞ்சித் கன்வர், ஆதித்ய பிரகாஷ், ரிச்சர்டு சாலமன், வல்லப பிரகாஷ், நெயில், பெர்ரி ஸ்மித் ஆகியோரும் இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

❖ வரலாறு 09.12.2022



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

**சோகங்கள் நமக்குச் சொந்தமானது அல்ல. அதைத் தக்க வைத்துக் கொள்வதும் தகர்த்தெறிவது அவரவர் துணிவில் தான் இருக்கிறது.**



தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,016 | Rs.5,418 |


# சட்டத்தை எந்தளவிற்கு நாங்கள் மதிக்கிறோமோ அந்தளவு தவறாக பயன்படுத்தினால் தடுப்போம்

## தமிழக அரசுக்கு ம.நீ.ம., எச்சரிக்கை!

சென்னை, டிச.09-

ம.நீ.ம., கட்சி மாநில செயலாளர் சிவ இளங்கோ அந்தப்பகுதிகளில் பல இடங்களில் மக்கள் நீதி மய்யம் கட்சிக் கொடிகளை ஏற்றி வந்தார். அதில் ஒரு நிகழ்வாக திண்டுக்கல் பொன்னகரம் பகுதியில் கொடியேற்ற முயலும் போது காவல்துறையினரால் ஏற்றக்கூடாது என்று தடுக்கப்பட்டார்.

இத்தனைக்கும் அந்தக் கொடி எற்கனவே அந்த இடத்தில் ஏற்றப்பட்டு, அங்கே கால்வாய் அமைக்கும் பணியால் அகற்றப்பட்டது. திரும்ப மற்ற கட்சிகளின் கொடி ஏற்றப்பட்டுவிட்டபின், இப்போது மக்கள் நீதி மய்யம் கட்சி கொடி மட்டும் ஏற்ற அனுமதியில்லை என்று தடுக்கப்பட்டது. ஏனைய கொடிகள் இருக்கும்போது



எங்கள் கொடியை மட்டும் தடுப்பதேன். நாங்கள் எங்கள் கொடியை ஏற்றியே தீருவோம் என்று கட்சியினர் போராடியபின் அனுமதி அளிக்கப்பட்டு, பின் கொடி ஏற்றப்பட்டது.

சிலநாட்களுக்கு முன் சென்னை சூளைமேட்டில் போக்குவரத்துக்கு இடையூறாக 45 அடி உயரத்தில் தி.மு.க., தனது பிரமாண்டக்கொடியை ஏற்றியது. ஆட்சி அதிகாரம் தன் கையிலிருக்கும் தைரியத்தில் தமிழகம் முழுக்கநினைத்தஇடத்தில் தங்கள் கொடியை ஏற்றிக்கொள்ளும் தி.மு.க., நியாயமாகமற்றகொடிகள் பறக்கும் இடத்தில்கூட எங்கள் கொடியை ஏற்ற தடைசெய்வதை வன்மையாக கண்டிக்கிறோம்.

அன்னியர் ஆட்சியில் தேசியக்கொடி ஏற்ற ஆங்கிலேயர்கள் தடை செய்ததுபோல் ஆளும்கட்சி மற்றகட்சிகளைகொடிஏற்ற விடாமல்தடுப்பதை,பயந்து கொண்டிருக்காமல், அன்று போல இன்றும் எதிர்த்து கொடியேற்றுவோம். மக்கள் நீதி மய்யம் கட்சி சட்டத்தை எந்தளவிற்கு மதிக்குமோ, அந்தளவுக்கு, அதை தவறாக பிரயோகித்தால் தடுக்கவும் தயங்காது.

இவ்வாறு மக்கள் நீதி மய்யம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் பஸ் கட்டணம் உயராது போக்குவரத்துத்துறை அமைச்சர் உறுதி!

நாமக்கல், டிச.09-

நாமக்கல் அருகிலுள்ள பொம்மைக் குட்டைமேட்டில், மாநில லாரி உரிமையாளர்கள் சம்மேளன புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழாவில் தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.




பின்னர் அவர் நிருபர்களிடம் தெரிவித்ததாவது: மத்திய அரசு டீசல் விலையை தாறுமாறாக உயர்த்தி வருவதால், எல்லோருக்கும் மிக கஷ்டமான சூழல்தான். குறிப்பாக பஸ் போக்குவரத்து, லாரி போக்குவரத்து நடத்துபவர்கள், மிக சிரமமான சூழலில் இருப்பதை அறிகிறோம். தமிழக அரசு போக்குவரத்து கழகம், மிகப்பெரிய கடனில் இருக்கிறது. காரணம் டீசல் விலை உயர்வு தான். இந்த டீசல் விலை உயர்வை ஒரு வகையிலும் கணக்கிட முடியாமல், கட்டுக்கடங்காமல் உயர்த்தியதால் தான், மிகப்பெரிய நெருக்கடிக்கு ஆளாகி இருக்கிறோம்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே சட்டசபையில் அறிவித்தபடி 1,000 புதிய பஸ்கள் வாங்குவதற்கு ரூ.420 கோடி ஒதுக்கி தற்போது அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் டெண்டர் விடப்பட்டு, புதிய வாகனங்கள் வாங்கி, மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.

மக்களுக்கு பாதிப்பு வரக்கூடாது என்று முதல்வர் பஸ் கட்டணம் உயர்வு கிடையாது என ஏற்கனவே அறிவித்திருக்கிறார். மினி பஸ் உரிமையாளர்கள், முதல்வரை சந்தித்து, தங்களது கோரிக்கையை வலியுறுத்தி உள்ளனர். அதுகுறித்து அரசு அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தி இருக்கிறோம். விரைவில் அதற்கு ஒரு தீர்வு கிடைக்கும்.

நாமக்கல்லில் லாரிகளை நிறுத்த 'யார்டு' அமைக்க வேண்டும் என ராமலிங்கம் எம்.எல்.ஏ., வலியுறுத்தி இருக்கிறார். சுற்றுலாத்துறை அமைச்சர் மதிவேந்தனும் தெரிவித்துள்ளார். முதல்வரின் கவனத்துக்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மின்சார வாகனம் வாங்குவதற்கும் டெண்டர் விடப்பட்டுள்ளது.

இவ்வாறு போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.






ஆலங்குடி அருகே வெட்டன்விடுதியில் சசிக்குமாருக்கு சொந்தமான 60 அடி ஆழமுள்ள தண்ணீர் இல்லாத கிணற்றில், அப்பகுதியைச் சேர்ந்த முருகேசனுக்கு சொந்தமான பசுமாடு மேய்ச்சலுக்குச் சென்ற போது தவறி விழுந்துள்ளது. தகவலறிந்து அங்கு சென்ற ஆலங்குடி தீயணைப்பு நிலைய அலுவலர் போக்குவரத்து சீனிவாசன் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் கிணற்றில் இறங்கி பசுமாட்டை உயிருடன் மீட்டனர்.

# தடைசெய்யப்பட்ட லாட்டரி விற்பனை ஆவுடையார்கோவிலில் இருவர் கைது

ஆவுடையார் கோவில், டிச.09-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகிலுள்ள ஜவுளிக்கடையில் கேரளா லாட்டரி விற்பனை செய்த இரண்டு பேரை நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு கைது செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அருகே தனியாருக்கு சொந்தமான ஜவுளிக்கடை உள்ளது. இந்த ஜவுளிக் கடையில் கேரள லாட்டரிகள் விற்கப்படுவதாக புதுக்கோட்டை சிறப்பு காவல் துறையினருக்கு



ரகசிய தகவல் கிடைத்தது.

இதனடிப்படையில் அப்பகுதியில் ரகசியமாக கண்காணித்த காவல்துறையினர் பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ரகு என்பவரது மகன் சுப்பையா மற்றும் பெருங்குளம் கிராமத்தைச் சேர்ந்த கருப்பையா என்பவரை கைது செய்து அவர்கள் பயன்படுத்திவந்தஇரண்டு செல்போன்கள், இரண்டு இரு சக்கர வாகனம், 12 ஆயிரத்து 70 ரூபாய் ரொக்கம் ஆகியவற்றை கைப்பற்றினர். மேலும், அந்த இரண்டு நபர்களையும் ஆவுடையார் கோவில் காவல் நிலையத்தில் மேல் நடவடிகைக்காக ஒப்படைத்தனர்.

மேலும் இப்பகுதியில் ஜவுளிக்கடை என்ற போர்வையில் கேரளா லாட்டரி விற்கப்படுவது தெரியவந்ததையடுத்து அப்பகுதி மக்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# விவசாயி வீட்டில் மர்மநபர்கள் கொள்ளை ரூ.5 லட்சத்து 75 ஆயிரம், 8 சவரன் நகை



கள்ளக்குறிச்சி, டிச,09-

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம் எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்திற்கு உட்பட்ட எல்லைகிராமம் கிராமத்தில் வசித்து வரும் விவசாயி வீராசாமி வயது 56. இவர் புதிய வீடு கட்டி வருகிறார். இந்நிலையில் நேற்றிரவு கட்டிக் கொண்டிருக்கும் புதிய வீட்டிலேயே குடும்பத்தினருடன் இரவு உறங்கி உள்ளனர்.

வழக்கம்போல் காலை எழுந்து கட்டுமான பொருட்கள் வாங்குவதற்காக தனது பழைய வீட்டில் வைத்திருந்த பணத்தை எடுக்கச் சென்ற போது வீட்டின் பின்புறம் உள்ள ஜன்னல் உடைக்கப்பட்டு இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்த விவசாயி உள்ளே சென்று பார்த்தபோதுபீரோவில் வைக்கப்பட்டிருந்த ரொக்க பணம் ரூபாய் 5 லட்சத்து, 75 ஆயிரம் மற்றும் 8 சவரன் நகை ஆகியவற்றைமர்மநபர்கள் திருடிச்சென்றுள்ளது தெரியவந்தது.

உடனே விவசாயி எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக புகார் அளித்துள்ளார். இப்புகாரை பெற்றுக் கொண்ட காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு, கொள்ளையடித்த மர்மநபர்களை தேடி வருகின்றனர்.


# டிச.,12ல் சென்னை – யாழ்ப்பாணம் இடையே விமான சேவை!

சென்னை, டிச.09-

இலங்கையின் வடக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்கு மீண்டும் விமான சேவையை தொடங்க இருப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. அதன்படி, சென்னை - யாழ்ப்பாணம் இடையேயான விமான சேவை வருகிற 12ம் தேதி தொடங்குகிறது.

முதல் கட்டமாக வாரத்துக்கு 4 விமானங்கள் சென்னை-யாழ்ப்பாணம் இடையே இயக்கப்படுகின்றன. ஏற்கனவே 2019ம் ஆண்டு அக்டோபர் சென்னை - யாழ்ப்பாணம் இடையே விமான போக்குவரத்தை தொடங்க சோதனை செய்யப்பட்டன. அதே ஆண்டு நவம்பர் சென்னை - யாழ்ப்பாணம் இடையே விமான சேவை தொடங்கப்பட்டது. 2020ம் ஆண்டு மார்ச் வரை இவ்விமான போக்குவரத்து நடைபெற்றது.

அதன்பிறகு, கொரோனா



தொற்று பரவியதால் சென்னை - யாழ்ப்பாணம் விமான சேவை நிறுத்தப்பட்டது. அதன் பிறகு 3 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் வருகிற 12ம் தேதி முதல் விமான சேவை தொடங்குகிறது. யாழ்ப்பாணத்தின் பலாவி பகுதியில் இருந்து விமானங்கள் இயக்கப்பட உள்ளது.

கடந்த 2020-ம் ஆண்டு கொரோனா பரவல் காரணமாக இலங்கையில் சுற்றுலா துறை முற்றிலும் முடங்கியது. இதனால் பல்வேறு விமான சேவைகளும் நிறுத்தப்பட்டன. இலங்கையில் பொருளாதார நெருக்கடி அதிகரிக்க கொரோனா பரவலும் ஒரு காரணமாகும். இந்நிலையில் கடந்த சில மாதங்களாக இலங்கையில் சுற்றுலா துறை சற்று மேம்பட்டுள்ளது.

இதையடுத்து விமான சேவைகளை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளும் முயற்சியில் உள்ள இலங்கைக்கு இந்த விமான சேவை மூலம் சுற்றுலா வருவாய் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை இலங்கைக்கு அதிக வருவாய் ஈட்டித்தரும் பிரிவாக உள்ளது.

சென்னை - யாழ்ப்பாணம் விமான சேவை தொடங்கப்படும் நிலையில் யாழ்ப்பாணத்தில் இதற்கான ஓடுபாதைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. இவ்விமான சேவையை யாழ்ப்பாணம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் தமிழர்கள் வரவேற்றுள்ளனர். இவ்வாறு அலையன்ஸ் ஏர் மூத்த அதிகாரி தெரிவித்தார்.

# ஆவுடையார்கோவில் விபத்தில் 2 பேர் பலி

ஆவுடையார்கோவில், டிச.09-

ஆவுடையார்கோவில் அருகேதுரையரசபுரத்தில் நடந்த சாலை விபத்தில் இரண்டு வாலிபர்கள் பலியாகினர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் அருகே நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் அறந்தாங்கியில் இருந்து ஆவுடையார் கோவில் நோக்கி ஆர்.எஸ்.பதி கம்புகளை ஏற்றி வந்தலாரி மீது அறந்தாங்கி நோக்கி இரு சக்கர வாகனத்தில் சென்ற கிடங்கி வயல் பழனிச்சாமி மகன் ராஜா கருப்பையா (23) என்பவரும், உதயமாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த



அந்தோணி மகன் மைக்கேல் பிரவீன் (23) என்கின்ற இரண்டு வாலிபர்களும் நிலை தடுமாறி லாரி மீது நேருக்கு நேர் மோதியதால் கிடங்கி வயல் ராஜா கருப்பையா சம்பவ இடத்திலேயே பலியானார்.

சம்பவத்தைச் பார்த்தவர்கள் 108 ஆம்புலன்ஸுக்கு தகவல் கொடுக்கவே உயிருக்காக போராடிக் கொண்டிருந்த மைக்கேல் பிரவினை அறந்தாங்கி மருத்துவமனையிலும் பிறகு மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சென்று சேர்த்தனர். அங்கு சிகிச்சைபலனின்றி அவரும் இறந்தார். இறந்துள்ள இரண்டுவாலிபர்களையும் பிரேத பரிசோதனைக்கு பின் அவரவர் சொந்த ஊரில் நல்லடக்கம் செய்துள்ளனர்.

இதுசம்பந்தமாக ஆவுடையார் கோவில் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# மதுரை டி.வி.எஸ்., மேல்நிலைப்பள்ளி பொன்விழா முதியோர்களுக்கு உதவுவோம் மாரத்தான் போட்டி

மதுரை, டிச.09-

மதுரை பழங்காநத்தம் டி.வி.எஸ்., நகரில் உள்ள டி.வி.எஸ்., மேல்நிலைப்பள்ளி பொன் விழா ஆண்டு வருகிற 23ம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

இதுகுறித்து பள்ளி செயலாளர் வெங்கட் நாராயணன், துணை இயக்குனர் மைதிலி, முதல்வர் அருணா குமார் ஆகியோர் கூட்டாக அளித்த பேட்டியில் கூறியாதவது:

எங்களுடைய டி.வி.எஸ்., மேல்நிலைப்பள்ளி கடந்த 1972ம் ஆண்டு தொடங்கப்பட்டது .தற்போது ஷோபனா ராமச்சந்திரன் தலைமையில் 4,500 மாணவர்கள் மற்றும் 200 ஆசிரியர்களுடன் செயல்பட்டு வருகிறது. எங்களுடைய டி.வி.எஸ்., பள்ளி பொன்விழா ஆண்டு வருகிற 23ம் தேதி கொண்டாடப்படுகிறது.



இதை ஒட்டி வருகிற 11ம் தேதி முதியோர்களுக்கு உதவுவோம் என்ற தலைப்பில் அனைத்து பள்ளி மாணவ, மாணவிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் பங்கேற்க உள்ள மாரத்தான் போட்டி நடைபெற உள்ளது. இதைத்தொடர்ந்து வருகிற 17ம் தேதி பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கொண்டாடுகின்ற வகையில் சங்கமம் என்ற மாபெரும் நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து 23ஆம் தேதி பள்ளியின் பொன்விழா ஆண்டு கொண்டாட்டம் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் அரவிந்த் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் வெங்கடேஷ் பிரஜனா உள்பட ஏராளமான முக்கிய பிரபலங்கள் மற்றும் பழைய மாணவர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

பேட்டியின் போது, துணை முதல்வர்கள் ஸ்டீபன், உஷா தேவி, ரேணுகா, டேக்வாண்டோ பயிற்சியாளர் நாகராஜ், மக்கள் தொடர்பு அலுவலர் சந்தோஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம், வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை சார்பில் கள்ளச்சாராயம், மது மற்றும் போதை பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து ஆடல்பாடலுடன் கூடிய கலை நிகழ்ச்சி விழிப்புணர்வு கலைப்பயணத்தை மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் கொடியசைத்து துவக்கி வைத்தார். டி.ஆர்.ஓ., ராமமூர்த்தி, மாவட்ட திட்ட ஊராட்சி தலைவர் பாபு, மேயர் சுஜாதா, உதவி ஆணையர் கலால் (பொறுப்பு) விஸ்வநாதன், ஆர்.டி.ஓ., பூங்கொடி, துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

# நீர்நிலைகளில் குப்பை கொட்டினால் அந்த லாரியை சிறை பிடியுங்கள்: மக்களுக்கு துரைமுருகன் அறிவுரை!

வேலூர், டிச.09-

வேலூர் மாவட்டம், காட்பாடி கழிஞ்சூர் ஏரியில் ரூ.139.21 கோடி மதிப்பீட்டில் 8 பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நடந்தது.

விழாவில், காட்பாடி தாராபடவேடு, கழிஞ்சூர் ஏரியில் ரூ.28 கோடியில் சுற்றுலாத்தலம் அமைத்து அதில் படகு சவாரி, நடை பயிற்சி செல்ல தரைத்தளம் அமைத்தல், ஏரியின் நடுவில் செயற்கைத்தீவு அமைத்து சுற்றுலா பயணிகள் செல்லும் வகையில் வசதிகளை செய்து தரும் பணிகளுக்கு பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டி துரைமுருகன் பேசியதாவது:

ஏரி போன்ற நீர் நிலைகளை மக்கள் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது. இனிமேல் எந்த பகுதியிலாவது குப்பைகளை கொட்டினால் அந்த லாரிகளை அங்கேயே சிறை பிடியுங்கள். எனக்கு தகவல் தெரிவியுங்கள்.




நான் வருகிறேன். அவர் எந்த அதிகாரியாக இருந்தாலும் அவரை நான் பார்த்துக் கொள்கிறேன். நீர்நிலைகளை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சியர் சொன்னது போன்று பாலாற்றை சுற்றிலும் குப்பைகள் கொட்ட முடியாத அளவுக்கு தடுப்பு வேலிகள் அமைக்கப்படும். விரைவில் காட்பாடியில் ஐ.டி., பார்க், சிப்காட் கொண்டு வரப்படும்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் தலைமை வகித்தார். கண்காணிப்பு பொறியாளர் சண்முகம் வரவேற்றார். நரசிம்மன், புஷ்பலதா வன்னியராஜா, வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் சுனில் குமார், பாபு, நந்தகுமார், அமுலு விஜயன், ஆற்காடு ஈஸ்வரப்பன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், வன்னிய ராஜா, அன்பு, சரவணன், ரஜினி, விமலா, சித்ரா, சீனிவாசன், ராமமூர்த்தி, பூங்கொடி மற்றும் பல துறைகளை சேர்ந்த அரசு அதிகாரிகள், மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# புதுச்சேரியில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி சாதனை மாணவனுக்கு அமைச்சர் நமச்சிவாயம் வாழ்த்து



புதுச்சேரி, டிச.09-

புதுச்சேரியில் நடைபெற்ற மாநில அளவிலான அறிவியல் கண்காட்சியில் தொடக்கப் பள்ளிகளுக்கான பிரிவில் தலைக்கவசம் அணிந்தால் தான் இருசக்கர வாகனம் ஸ்டார்ட் ஆகும் என்ற புதிய சாதனத்தை கண்டுபிடித்து காரைக்காலுக்குப் பெருமை சேர்த்த அரசு தொடக்கப்பள்ளி கோட்டுச்சேரி பேட் பள்ளி மாணவன் ஜெயரமணா மற்றும் வழிகாட்டி ஆசிரியர்கள், கல்வி அமைச்சர் நமச்சிவாயம் வெள்ளி மெடல் அணிவித்து பாராட்டி சிறப்புப் பரிசு வழங்கினர்.

ஆசிரியர் பிரிவில் கேரளாவில் நடைபெற உள்ள தெற்கு இந்திய அறிவியல் கண்காட்சியில் பங்குபெற புதுச்சேரியிலிருந்து மொத்தம் 15 ஆசிரியர்கள் தேர்வாகியுள்ளனர். இந்த பட்டியலில் காரைக்காலிலிருந்து கோட்டுச்சேரி பேட், அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியர் சுரேஷ் குமார் மட்டும் தேர்வாகியுள்ளார். இவர் அரசு பள்ளிகளில் ஆகியுமென்ட் ரியாலிட்டி என்ற செயற்கை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மாணவர்களுக்கு எவ்வாறு சுலபமாக பாடம் கற்பிக்கலாம் என்ற தலைப்பின் கீழ் தேர்வாகியுள்ளார்.

எனவே, மாணவர் பிரிவிலும் ஆசிரியர் பிரிவிலும் அரசு தொடக்கப்பள்ளி கோட்டுச்சேரிபேட்டை சேர்ந்த மாணவனும், ஆசிரியரும் தேர்வாகியுள்ளது இரட்டிப்பு மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாக உள்ளது என்று பெற்றோர் மற்றும் கிராம மக்கள் தெரிவித்து மரியாதை செய்தனர்.

மேலும், மாணவனை ஊக்கப்படுத்திய பள்ளி ஆசிரியர்களுக்கும், இந்த வாய்ப்பை வழங்கிய காரைக்கால் கல்வித்துறை அதிகாரிகள் அனைவருக்கும் அரசு தொடக்கப்பள்ளி கோட்டுச்சேரிபேட்டின் பொறுப்பாசிரியர் சுரேஷ் குமார் நன்றி தெரிவித்தார்.

# ஆலங்குடி அருகே பால் வண்டி மோதி ஒருவர் பலி



ஆலங்குடி,டிச.09-

ஆலங்குடி அருகே தனியார் பால் பண்ணைக்கு பால் ஏற்றிவந்த வாகனம் மோதி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே கீழாத்தூர் கட்ராம்பட்டியை சேர்ந்தவர் ஆவுடை மகன் சந்திரசேகர் (வயது 42). இவர் டூவீலரில் வடகாடு கடைவீதியில் இருந்து கட்ராம்பட்டி நோக்கி வந்து கொண்டிருந்தார். அப்போது கீழாத்தூரில் இயங்கி வரும் தனியார் பால் நிறுவன பண்ணைக்கு பால் ஏற்றி வந்த வாகனம் திடீரென சந்திரசேகர் டூவீலர் மீது மோதியது.

இதில், படுகாயமடைந்த சந்திரசேகரை உடனே அருகில் இருந்தவர்கள் மீட்டு வடகாடு அரசு மருத்துவமனைக்கு தூக்கிச் சென்றனர். ஆனால், செல்லும் வழியிலேயே சந்திரசேகர் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து வடகாடு காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து உயிரிழந்த சந்திரசேகரின் உடலைபிரேதபரிசோதனைக்கு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பால் வண்டியை ஓட்டிவந்த நபரை போலீசார் தேடி வருகின்றனர்.

# அரியலூர் கூட்டுறவு பால் பண்ணை முற்றுகை வாடிக்கையாளர்கள் ஆர்ப்பாட்டத்தால் பரபரப்பு



அரியலூர், டிச.09-

அரியலூர் மாவட்டத்தில், கூட்டுறவு பால் பண்ணைகள் மூலம் கொள்முதல் செய்யப்படும் பால் அளவில், 10 சதவீதம் மட்டுமே அப்பகுதி மக்களுக்கு வழங்க வேண்டும் என, கூட்டுறவுத்துறை சார்பில் உத்தரவிடப்பட்டு, கடந்த சில நாட்களாக செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் வாடிக்கையாக கூட்டுறவு பால் பண்ணைகளில் பால் வாங்கச் செல்லும் மக்கள் பலருக்கும், பால் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதையடுத்து, அரியலூர் நகரிலுள்ள கூட்டுறவு பால் பண்ணை மற்றும் சுற்றுவட்டார பகுதியில் உள்ள பொய்யாத நல்லூர், வி.கைகாட்டி, கீழ உசேன் நகரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து கேன்களில் பால் கொள்முதல் செய்து கொண்டு, அரியலூருக்கு வர இருந்த வாகனங்களை, ஆங்காங்கே நேற்று காலை மக்கள் முற்றுகையிட்டு, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரியலூர் நகரிலுள்ள கூட்டுறவு பால் பண்ணை முன் திரண்ட 100க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள், பால் குளிரூட்டும் மையங்களுக்கு பால் கேன்கள் ஏற்றப்பட்ட, வாகனங்களை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். உள்ளூர் மக்களின் தேவைக்கேற்ப, பால் வழங்காத பால் கூட்டுறவு சங்க நிர்வாகிகளை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கோஷங்கள் எழுப்பியத்துடன், கடந்த காலங்களில் செயல்படுத்திய வழக்கமான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த போலீசார் மற்றும் பால் உற்பத்தியாளர் சங்க செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள், மக்களிடம் சமாதான பேச்சுவார்த்தை நடத்தினர்.

பொது மக்களுக்கு பால் வழங்குவதில், கடந்த காலங்களில் செயல்படுத்திய அதே நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டதை அடுத்து, மக்களின் முற்றுகை போராட்டம் வாபஸ் பெறப்பட்டது. இதனால் அப்பகுதியில் சுமார் 2 மணி நேரம் பால்பண்ணை நிர்வாக பணிகள் பாதிக்கப்பட்டது.

# பூம்புகாரில் தூண்டில் வளைவு அமைக்கவும், கடல் அரிப்பை தடுக்க கருங்கல் கொட்டி மீனவர்களை பாதுகாக்க ஆட்சியர் லலிதா கோரிக்கை



சீர்காழி , டிச. 09-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வாணகிரி மற்றும் பூம்புகார் மீனவ கிராமங்களில் பாதுகாப்பு நடவடிக்கை, தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் சந்தித்து அலோசனை நடத்திய ஆட்சியர் லலிதா, மாண்டஸ் புயல் மழையை எதிர்கொள்ள மயிலாடுதுறை மாவட்டத்தில் அனைத்து பாதுகாப்பு முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை. பொதுமக்கள் தேவையின்றி வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம், நீர்நிலைகளுக்கு அருகில் செல்ல வேண்டாம் என மாவட்ட ஆட்சியர் லலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் "மாண்டாஸ் புயல்" மழையினை எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 4 பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் உள்ளது. 11 புயல் பாதுகாப்பு மையங்கள் மற்றும் தற்காலிக நிவாரண மையங்கள் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் என 346 ஆகியன தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மிகவும் அதிகமாக பாதிக்கக்கூடிய இடங்களாக 12 பகுதிகள், அதிகம் பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் 33, குறைந்த அளவு பாதிக்கக்கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தம் 4500 க்கும் அதிகமான முதல்நிலை பொறுப்பாளர்கள் அனைத்து வட்டங்களிலும் பயிற்சியளிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளார்கள். கடலோர பகுதிகளை கண்காணிக்க 24 பேர் கொண்ட தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் வாணகிரி கிராமத்தில் முகாமிட்டுள்ளனர்.

புயல் மற்றும் மழை காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புகளை உடனடியாக அகற்றி இயல்பு நிலை ஏற்படுத்திட ஏதுவாக ஜேசிபி 34, ஜெனரேட்டர்கள் 7, பவர்சா 22, ஹிட்டாச்சி 10, மணல் மூட்டைகள் 26870, மரம் அறுக்கும் கருவிகள், சவுக்கு கம்பங்கள் 23065, பிளிச்சிங் பவுடர் 4700 கிலோ ஆகியன் போதிய அளவில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்

மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்கள். பொதுமக்கள் புயல் மழை காலங்களில் பாதுகாப்பாக இருக்கவும், அரசின் எச்சரிக்கைகளை முழுமையாக கடைபிடித்து நடந்திடவும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்கள். மேலும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் உள்ளது என மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளது. இதில் கோட்டாட்சியர் அர்ச்சனா, வட்டாட்சியர் செந்தில்குமார், சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் கமல ஜோதி தேவேந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவன் மற்றும் அரசு அதிகாரிகள் மீனவர்கள் ஆய்வு போது உடன் இருந்தனர்.



▶ காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க., நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் காஞ்சிபுரம் பெரியார் தூண் அருகே நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் சோமசுந்தரம் பங்கேற்று ஆலோசனை வழங்கினார். அமைப்புச் செயலாளர்கள் வாலாஜாபாத் கணேசன், மைதிலி, பன்னீர்செல்வம், கிருஷ்ணமூர்த்தி, வள்ளிநாயகம், ஜீவானந்தம், ராஜி, ரமேஷ், ஸ்டாலின், பாலாஜி, ஜெயராஜ், ரவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



▶ செஸ் விளையாட்டில் ஜனாதிபதியால் அர்ஜுனா விருது பெற்ற பிரக்ஞானந்தாவுக்கு பாராட்டு தெரிவிக்கும் வகையில் முகப்பேர் வேலம்மாள் பள்ளியில் நடந்த பாராட்டு விழாவில், விளையாட்டு துறை அமைச்சர் சிவ.மெய்யநாதன் மற்றும் இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு சிறப்பு விருந்தினராக பங்கேற்று பிரக்ஞானந்தாவை வாழ்த்தினர். பிரஞ்ஞானந்தாவை பாராட்டும் வகையில் ரூ.7 லட்சம் பரிசுத்தொகையை அமைச்சர் சிவ.மெய்யநாதன் வழங்கினார்.



▶ வேலூர் மாவட்டம், காட்பாடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், பள்ளி கல்வித்துறை சார்பில், மாவட்ட அளவிலான கலைத் திருவிழா நடைபெற்றது. இதை மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். இதில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனுசாமி மற்றும் மாவட்டம் முழுவதுமிருந்து பல்வேறு அரசு பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். அந்தந்த பள்ளி ஆசிரியர், ஆசிரியைகள், பெற்றோர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



▶ குஜராத் மாநிலத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ., 156 தொகுதிகளில் வெற்றி பெற்றதைக் கொண்டாடும் விதமாக காஞ்சிபுரம் பேருந்து நிலையம் இரட்டை மண்டபம் போக்குவரத்து சிக்னல் அருகே காஞ்சிபுரம் பா.ஜ., மாவட்ட துணைத் தலைவர் செந்தில்குமார் தலைமையில் காஞ்சிபுரம் மாநகர மேற்கு தலைவர் காஞ்சி ஜீவானந்தம் முன்னிலையில் 100க்கும் மேற்பட்ட பா.ஜ.,வினர் வெடி வெடித்தும், சாலையில் செல்லும் வாகன ஓட்டிகளுக்கும், மக்களுக்கும் இனிப்புகளை வழங்கியும், வெற்றி கோசங்களை எழுப்பி பா.ஜ., வெற்றியைக் கொண்டாடினர்.

# சீர்காழி அருகே வெள்ளகுளம் கிராமத்தில் குடிசை வீடு எரிந்து நாசம்

சீர்காழி, டிச. 09-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வெள்ளகுளம் கிராமத்தைச் சேர்ந்த சின்னதுரை (60) என்பவரின் வீடு, வீட்டிற்குள் இருந்த மின் வயரிலிருந்து வெளியேறிய மின் கசிவின் மூலம் தீப்பொறி வெளியேறி குடிசை வீட்டின் கூரையில் உள்ள கீற்றில் பட்டு தீ பிடித்து எறிய ஆரம்பித்தது.இது குறித்து தகவல் அறிந்த சீர்காழி தீயணைப்பு படை வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீ மேலும் பரவாமல் அணைத்தனர்.

இந்த தீ விபத்தில் வீட்டிற்குள் வைத்திருந்த அனைத்து அத்தியாவசிய பொருட்களும் எரிந்து சேதம் ஆயின. இது குறித்து தகவல் இருந்த புதுப்பட்டினம் போலீசார் வழக்கு பதிவு செய்து சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் தகவல் அறிந்த சீர்காழி எம் எல் ஏ பன்னீர்செல்வம், தாசில்தார் செந்தில்குமார் ஆகியோர் வெள்ளக்குளம் கிராமத்துக்கு வந்து தீ விபத்தில் பாதிக்கப்பட்ட சின்னதுரை மனைவி வசந்தாவிடம் நிவாரண தொகை மற்றும் நிவாரண பொருட்களை வழங்கினர். ஒன்றிய குழு தலைவர் ஜெயபிரகாஷ்,வருவாய் ஆய்வாளர் சுகன்யா,விஏஓ வெங்கடேசன், ஒன்றிய குழு உறுப்பினர் அங்கு தன் மற்றும் அதிகாரிகள் ஊழியர்கள் உடன் இருந்தனர்.

# காரைக்காலில் உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணி மாணவிகள் பங்கேற்பு: கலெக்டர் துவக்கி வைப்பு



காரைக்கால்,டிச.09-

காரைக்காலில் உலக எய்ட்ஸ் தின விழிப்புணர்வு பேரணி நலவழித்துறை சார்பில் நடத்தப்பட்டது.

காரைக்கால் அன்னை தெரேசா அரசு செவிலியர் கல்லூரி மாணவிகளின் பங்கேற்புடன் எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காரைக்கால் மாவட்ட ஆட்சியர் முகமது மன்சூர் கொடியசைத்து பேரணியை தொடங்கி வைத்தார்.

எய்ட்ஸ் நோய் குறித்தும், எய்ட்ஸ் நோயை பற்றி மக்களிடம் எந்த வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும், எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்? என்றும் அவர்களுக்கு அன்பும் ஆதரவும் கொடுக்க வேண்டும் என்றும் சிகிச்சைக்கான முறை குறித்தும் காரைக்கால் நலவழித்துறை துணை இயக்குனர் சிவராஜாகுமார் செவிலியர் பயிற்சி பெறும் மாணவிகளிடையே பேசினார்.

எய்ட்ஸ் விழிப்புணர்வுக்கான கருத்துகள் எழுதப்பட்ட பதாகைகள் ஏந்தி மாணவிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து முக்கிய வீதிகளின் வழியே சென்றனர். கோஷங்கள் எழுப்பியவாறு சென்ற மாணவியர்கள் நலவழித்துறை சார்பிலான எய்ட்ஸ் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை மக்களிடம் விநியோகித்தனர். பேரணியில், நலவழித்துறை நோய்த்தடுப்பு திட்ட மருத்துவ அதிகாரி தேனாம்பிகை, நோய்த்தடுப்பு தொழில்நுட்ப உதவியாளர் சேகர், செவிலியர் கல்லூரி உதவி விரிவுரையாளர் டயானா மற்றும் கார்திகா ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேரணிக்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப உதவியாளர் சேகர், சுகாதார ஆய்வாளர்கள் வெங்கடேசன், சிவ வடிவேல் மற்றும் சுகாதார உதவியாளர்கள் செய்திருந்தனர்.

# உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடி அருகே 3 டன் ரேஷன் அரிசி கடத்தியவர் கைது





கள்ளக்குறிச்சி, டிச.09-

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடி அருகே உளுந்தூர்பேட்டை காவல் துறையினர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போது, அவ்வழியாக வந்த நான்குசக்கர பொலீரோ பிக்கப் வாகனத்தை சந்தேகத்தின் பேரில் மடக்கிபிடித்து சோதனை செய்ததில், அதில் 3 டன் ரேஷன் அரிசி விழுப்புரத்தில் இருந்து கடத்திவரப்பட்டது தெரியவந்தது.

மேலும் வாகன ஓட்டுநரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டதில் ஓட்டுநர் திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் அருகிலுள்ள பூவம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த பெருமாள் மகன் உதயகுமார் வயது 30 என்பது தெரியவந்தது.

இதையடுத்து பறிமுதல் செய்யப்பட்ட பொலீரோ பிக்கப் வாகனம் உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு, வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆண்டிமடம், ஜெயங்கொண்டத்தில் வி.சி.க., ஆர்ப்பாட்டம்



அரியலூர்,டிச.09-

ஆண்டிமடம் மற்றும் ஜெயங்கொண்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில், கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


அம்பேத்கரை அவமானப்படுத்தி இழிவுப்படுத்தும் வகையில், அவரது புகைப்படத்துக்கு காவி வண்ணம் பூசி, விபூதி குங்குமத்தை வைத்து போஸ்டர் அடித்து, அவரது நினைவு நாளில் செயல்படுத்திய, இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜுன் சம்பத் மீது கைது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி, அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் கடை வீதியில், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, ஆண்டிமடம் ஒன்றிய செயலாளர் ராசா பிள்ளை தலைமை வகித்தார்.


கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாநில செயற்குழு உறுப்பினர் தமிழ்மாறன், வேலு, கலியமூர்த்தி, மணிகண்டன், சந்தான பறையன், மல்லிகா, ஆரோக்கியதாஸ், பொன் காமராஜ், குப்புசாமி, சேட்டு, வீரச்செல்வன், வீரமணி, கலியபெருமாள், செந்தில்குமார், இளையராஜா, விளந்தை ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி, ஆண்டிமடம் காவல் நிலையத்திலும், ஆண்டிமடம் ஒன்றிய வி.சி.க., சார்பில், ராசா பிள்ளை மற்றும் கட்சி நிர்வாகிகள் புகார் மனு கொடுத்துள்ளனர்.

*இதே கோரிக்கையை வலியுறுத்தி, ஜெயங்கொண்டம் கடை வீதியில் உள்ள காந்தி பூங்கா முன், வி.சி.க., மாவட்ட அமைப்பாளர் சிவக்குமார் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், கட்சியின் மாவட்ட செயலாளர் செல்வநம்பி, கட்சி நிர்வாகிகள் இலக்கியதாசன், சின்னராஜா, காஞ்சனா, சரவணன், உடையார்பாளையம் ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# திருநாவலூர் அருகே கார் மோதி விபத்து: வாலிபர்கள் இருவர் பலி





கள்ளக்குறிச்சி,டிச.09-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் செரத்தனூர் கிராம பகுதியில் உள்ள பெட்ரோல் பங்க் எதிரே சாலையில் நடந்து சென்ற இரண்டு வாலிபர்கள் மீது அவ்வழியாக அதிவேகமாக வந்த கார் மோதியதில் வாலிபர்கள் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

தகவலறிந்த திருநாவலூர் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு உடற்கூறு ஆய்வுக்காக விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து விசாரணை மேற்கொண்டதில் விபத்தில் உயிரிழந்தவர்கள் வேலூர் மாவட்டம், காட்பாடி, அரிக்கைமேடு பகுதியைச் சேர்ந்த மாரி மகன் சந்தோஷ்குமார் வயது 28, கோபால் மகன் ஆனந்த் வயது 30 என்பதும், காரை ஓட்டி வந்தவர் அரியலூர் மாவட்டம், கண்டராதித்தம் பகுதியை சேர்ந்த மாரி மகன் இளையராஜா வயது 40, என்பதும் தெரியவந்தது.

இவ்விபத்து குறித்து திருநாவலூர் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



மதுரை மாநகராட்சி மண்டலம்-3, வார்டு 50 பேச்சியம்மன் படித்துறை, மீன் மார்க்கெட் அங்கன்வாடி மைய புதிய கட்டிடத்தை அமைச்சர் பி.டிஆர்.பழனிவேல் தியாகராஜன் திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.அனீஷ் சேகர், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சிம்ரன் ஜீத் சிங் ஆகியோர் உடன் உள்ளனர்.

# கறம்பக்குடி அருகே கோழியை மீட்க முயன்ற வாலிபர் கிணற்றுக்குள் விழுந்ததால் பரபரப்பு!



கறம்பக்குடி,டிச.09-

கறம்பக்குடி அருகே வெள்ளாளக்கொல்லை கிராமத்தில் கிணற்றில் விழுந்த கோழிகளை மீட்க முயன்ற வாலிபர் 50 அடி ஆழமுள்ள தண்ணீரில்லா கிணற்றில் விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து கிணற்றுக்குள் விழுந்த வாலிபரை கறம்பக்குடி தீயணைப்புத்துறையினர் கயிறுகட்டி மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே வெள்ளாளக்கொல்லை கிராமத்தைச் சேர்ந்தவர் மாரியப்பன் (35). இவர் வளர்க்கும் கோழிகள் அருகே உள்ள 50 அடி ஆழமுள்ள தண்ணீர் இல்லாத கிணற்றில் விழுந்ததால் அதை மீட்க மாரியப்பன் கயிறு கட்டி கிணற்றுக்குள் இறங்கியுள்ளார்.

பின்னர் கோழியை மீட்டு விட்டு மாரியப்பன் கிணற்றுக்கு வெளியே வர முயற்சி செய்தபோது வர முடியாமல் மீண்டும் கிணற்றுக்குள் விழுந்துள்ளார். இதில் அவருக்கு கழுத்தில் காயமடைந்து கிணற்றிலிருந்து வெளியே வர முடியாமல் தவித்துள்ளார். இதையடுத்து அருகே இருந்தவர்கள் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

பின்னர் தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற கறம்பக்குடி தீயணைப்பு துறை வீரர்கள் கயிறு கட்டி கிணற்றில் இறங்கி கயிற்றின் மூலம் மாரியப்பனை பத்திரமாக மீட்டு கிணற்றுக்கு வெளியே கொண்டு வந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# உளுந்தூர்பேட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி



கள்ளக்குறிச்சி, டிச.09-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சியில் உள்ள மணிக்கூண்டு திடலில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைத்தல் தொடர்பாகவும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நாட்டுப்புற கலைக் குழுவினரால் கலை நிகழ்ச்சி தொடக்க விழா நடைபெற்றது.

விழாவில், நகராட்சி ஆணையர் சரவணன் வரவேற்றார். நகர்மன்ற தலைவர் திருநாவுக்கரசு தலைமையில், நகர்மன்றத் துணைத் தலைவர் வைத்தியநாதன் முன்னிலை வகித்தார். விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி உளுந்தூர்பேட்டை நகராட்சியில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில், தொடர்ந்து 3 நாட்களுக்கு நடக்கிறது.

இக்கலை விழாவில், நகர்மன்ற உறுப்பினர்கள், மக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# புயல் கரையை கடக்கும் நேரத்தில் இரவு நேர பேருந்துகளை இயக்கக்கூடாது: அரசு உத்தரவு



சென்னை, டிச.09-

வங்கக் கடலில் உருவாகிஉள்ள மாண்டஸ் புயல், மேற்கு, வடமேற்கு நோக்கி நகர்ந்து வருகிறது. இன்னும் சில மணி நேரத்தில் மாண்டஸ் புயல் அதிதீவிர புயலாக வலுப்பெற்று இன்று நள்ளிரவில் மாமல்லபுரம் அருகே கரையை கடக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

புயல் கரையை கடக்கும்போது மணிக்கு 65 கி.மீ., முதல் 85 கி.மீ., வரை வேகத்தில் பலத்த காற்று வீசும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புயல் எச்சரிக்கையைத் தொடர்ந்து கடலோர மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பல்வேறு மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்குவிடுமுறை விடப்பட்டுள்ளது. மீட்புப் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், புயல் கரையை கடக்கும் நேரத்தில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், திருவள்ளூர் மாவட்டங்களில் இரவு நேர பேருந்துகளை இயக்கக்கூடாது என்றும், போக்குவரத்து மேலாண் இயக்குனர்கள் மாவட்ட நிர்வாகத்துடன் தொடர்பில் இருக்க வேண்டும் என்றும் தமிழக அரசு அறிவுறுத்தி உள்ளது.

மேலும், புயல் கரையைக் கடக்கும் நேரத்தில் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம். பேருந்து நிலையங்களில் மக்கள் கூட்டம் கூடுவதை தவிர்க்க வேண்டும். அத்தியாவசிய பொருட்களை முன்கூட்டியே வாங்கி வைத்துக் கொள்ளுங்கள் என்றும் தமிழக அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சென்னை,காஞ்சிபுரம், செங்கல்பட்டு,விழுப்புரம், கடலூர், திருவள்ளூர், புதுக்கோட்டை, திருச்சி உள்ளிட்ட 22 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.









அமைச்சர் மா.சுப்பிரமணியன், செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நேற்று பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்து துறையின் நூற்றாண்டு நிறைவு விழாவில், துறை சார்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் தி.சி.செல்வவிநாயகம் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டத்தில் மிக அதிக கன மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதால் சீர்காழி வட்டம் பூம்புகார், காவிரிபூம்பட்டினம், மீனவர்களை ஆட்சியர் லலிதா நேரில் சந்தித்து பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தினார். அருகில், சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் அர்ச்சனா மற்றும் பலர் உள்ளனர்.



சென்னை ஆர்.கே.நகர் பகுதியில் ரோட்டில் கண்டெடுத்த, ரூ.7,705 பணம் அடங்கிய பர்சை ஆர்.கே.நகர் காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் ரவியிடம் ஒப்படைத்த 5-ம் வகுப்பு மாணவிகளை நேரில் அழைத்து பாராட்டிய காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால் மாணவிகளுக்கு எழும்பூரிலுள்ள காவல் அருங்காட்சியகத்தை சுற்றி காண்பித்து மகிழ்ச்சிப்படுத்தினார்.



தென்காசி மாவட்டம் புளியங்குடி அரசு போக்குவரத்து கழகம், அண்ணா தொழிற்சங்கம் போக்குவரத்து பிரிவு திருநெல்வேலி மண்டலம் மேற்கு கிளை சார்பாக மறைந்த ஜெயலலிதா 6ம் ஆண்டு நினைவு அஞ்சலியில் மனிதம் போற்றும் புனிதமே, பூமி இருக்கும் வரை உங்கள் புகழ் இருக்கும், என வாசகத்துடன் மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் மண்டல செயலாளர் ராமையா, மண்டல பொருளாளர் ஆத்மநாபன், மண்டல விபத்து பிரிவு செயலாளர் பாலசுப்பிரமணியன், துணைத் தலைவர் ஐயப்பன், நிர்வாகிகள் குமார், இசக்கி குமார், முத்துக்குமார், கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.



தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் முப்படைவீரர் கொடி நாளினை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர் சார்ந்த 11 வாரிசுதாரர்களுக்கு ரூ.3.73 லட்சம் மதிப்பிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளை மாவட்ட கலெக்டர் க.வீ.முரளீதரன், வ

# வங்கடலில் உருவாகிய மாண்டஸ் புயலை எதிர்கொள்ள சென்னை முழுவதும் தீயணைப்பு மீட்புப்படையினர் தயார்!



சென்னை, டிச.09-

வட சென்னை மாவட்ட தீயணைப்பு அலுவலர் லோகநாதன் ஏற்பாட்டில் மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன் தலைமையில் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் எபிநேசர் முன்னிலையில் தண்டையார்பேட்டை மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் வட சென்னை தீயணைப்புத் துறை சார்பில் பேரிடர் காலத்தில் மக்களை மீட்கும் உபகரணங்களை காட்சிப்படுத்தினர்.

வங்கக்கடலில் கிழக்கு தென்கிழக்கு திசையில் மாண்டஸ்புயல் 550கிலோ மீட்டர் தொலைவில் நிலை கொண்டுள்ளது. மாண்டஸ் புயலை எதிர்கொள்ள சென்னை முழுவதும் தீயணைப்பு வீரர்கள் மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்டோர் தயார் நிலையில் உள்ளனர். லைப் ஜாக்கெட், ரப்பர் படகு, கயிறு, கட்டர் ஜென்செட் உள்ளிட்ட கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மக்கள் வீடுகளில் இருக்கும் பொருட்களைக் கொண்டு 25 லிட்டர் தண்ணீர் கேன், சிறிய தண்ணீர் கேன், டீசல் கேன் உள்ளிட்டவைகளை கொண்டு தங்களை எப்படி பாதுகாத்துக் கொள்வது? என்பது குறித்து பொருட்கள் விழிப்புணர்வுக்காக காட்சிப் படுத்தப்பட்டன.

மரங்கள் முறிந்து விழுந்தால் உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு மரம் அறுக்கும் கருவிகளும் வைக்கப்பட்டுள்ளன. அவசர கால உதவிக்கு 101,112, 1913ல், மக்கள் தொடர்புகொண்டுபுகார் தெரிவித்தால் விரைவாக செயல்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வட சென்னை மாவட்ட தீயணைப்பு அலுவலர் லோகநாதன் தெரிவித்தார்.

# 25 நாட்களாக மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதால் வாழ்வாதாரம் பாதிப்பு: தரங்கம்பாடி மீனவர்கள் வேதனை



மயிலாடுதுறை, டிச.09-

வங்கக்கடலில் நிலை கொண்ட மாண்டோஸ் புயல்சின்னம்காரணமாக மயிலாடுதுறை மாவட்டத்தில் கடல் சீற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சின்னூர்பேட்டை, சந்திரபாடி, தரங்கம்பாடி, சின்னங்குடி, சின்னமேடு, வானகிரி, பூம்புகார் உள்ளிட்ட மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள 28 மீனவர் கிராமங்களிலும் மீனவர்கள் கடலுக்குள் செல்லவில்லை.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மட்டும் சுமார் 400 விசைப்படகுகளும், 15,000 பைபர் படகுகளும் உள்ள நிலையில் படகுகளை பாதுகாப்பாக கரைகளில் ஏற்றி நிறுத்தி உள்ளனர்.

தரங்கம்பாடி மீன்பிடி துறைமுக பகுதியில் நேற்று 13 அடி உயரத்திற்கு அலைகள் சீறிப் பாய்ந்து துறைமுகத்தின் தடுப்புச் சுவர்களை அலைகள் மோதி தாண்டி உள்ளே நுழைந்தது பெரும் அச்சத்தை ஏற்படுத்துவதாக மீனவ கிராம மக்கள் தெரிவித்தனர். காற்று 50 கிலோமீட்டர் வேகத்தில் வீசி சாரல் மழையாக பெய்ததாக தெரிவித்தனர்.

வடகிழக்கு பருவமழை காரணமாக தொடர்ந்து கடல் சீற்றம் ஏற்பட்டுள்ளதால் 25 நாட்களுக்கு மேலாக மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லவில்லை இதன் காரணமாக அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும்என கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகளுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் உள்ளது போல் மீனவர்களுக்கும் மீனவர் நல கூட்டுறவு வங்கிகள் தொடங்க வேண்டும் என்றும், இதனால் தங்களுக்கு இது போன்ற புயல், வெள்ளம், பேரிடர் காலங்களில் நிவாரணம் பெறவும், கடனுதவி பெறவும் பெரும் வசதியாக இருக்கும் என்று மீனவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேலும், தொடர்ந்து கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அரசு அறிவுறுத்திருந்த நிலையில் பைபர் படகு மற்றும் விசைப்படகுகளை பாதுகாப்பான இடத்தில் பத்திரப்படுத்தி வைத்துள்ளதாகவும் மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் பத்திரமாக இருப்பதாகவும் மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தலைமை மீனவர் கிராம பஞ்சாயத்தார்கள் தெரிவித்தனர். இதனிடையே மக்கள் தேவை இன்றி வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

# புதுகை ஜெ.ஜெ. கலை கல்லூரியில் ஆசிரியர் திறன்மேம்பாட்டுப் பயிற்சி



புதுக்கோட்டை, டிச.09-

புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் (தன்னாட்சி) கல்லூரியில் அகத்தர மதிப்பீட்டு உறுதி குழு சார்பாக "உயர்தரமான ஆய்விதழ்களுக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் எவ்வாறு எழுதவேண்டும்? என்ற தலைப்பில் ஆசிரியர் திறன்மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற்றது.

பயிற்சியில், காரைக்குடி அழகப்பா பல்கலை பொருளியியல் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைத் தலைவர், பேராசிரியர் நாராயணமூர்த்தி கலந்துகொண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளின் முக்கியத்துவம், அவற்றிலிருந்து ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் கிடைக்கின்றபயன்களைப் பட்டியலிட்டுக்கூறினார்.

ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுத முற்படும்பொழுது ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளால் துவண்டுவிடக் கூடாது. ஆராய்ச்சியாளர்கள் மிகுந்த கவனத்துடனும் பொறுமையுடனும் செயல்படவேண்டும். ஒரு ஆராய்ச்சிக்கட்டுரை எந்தெந்த நிலைகளில் ஆய்வுக்குழுவினரால் திறனாய்வுச் செய்யப்படுகின்றது என்பதைப் பற்றி விளக்கினார்.

ஆய்வாளர்கள் தங்களுடைய கட்டுரைகளை ஆய்விதழ்களுக்கு அனுப்புவதற்கு முன், கருந்தரங்குகளில் வாசிக்கப்பட்டு, பல ஆய்வாளர்களால் விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டு அதிலிருக்கக்கூடிய குறைகளைச்சரிசெய்வதே ஆய்வாளர்க்கான நற்பண்புகளாகும் என்று கூறினார்.

இப்பயிற்சியில் கற்பக விநாயக கல்வி அறக்கட்டளை அறங்காவலர் கவிதா சுப்பிரமணியன் கலந்துகொண்டு ஆசிரியர்கள் ஆராய்ச்சியாளராக உயரவில்லை என்றால் தங்கள் பணிகளில் எந்தவிதமான வளர்ச்சியையும் அடையமுடியாது. எனவே, ஆசிரியர்களும், மாணவர்களும் ஆராய்ச்சியில் தங்களை மேன்மைப்படுத்துவதற்கு நிர்வாகம் எல்லா நிலைகளிலும் உதவிகளை வழங்கும் என்று கூறினார்.

முன்னதாக கல்லூரி முதல்வர் பரசுராமன் வரவேற்க, அகத்தரமதிப்பீடு உறுதிக்குழு ஒருங்கிணைப்பாளர் ஜீவன் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைக்க கணினி பயன்பாட்டியியல் துறைத்தலைவர் சதீஷ் ஆரோன் ஜோசப் நன்றி தெரிவித்து பேசினார்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# சாமானிய மக்களுக்கு உயர்பதவி மத்திய அமைச்சர் பெருமிதம்!

# நலத்திட்ட உதவிகள் வழங்கல் தென்காசிக்கு முதல்வர் வருகை!





# மதுராந்தகம் அருகே கோர விபத்து பக்தர்கள் 6 பேர் உடல்சிதறி பலி


சென்னை / புதுக்கோட்டை | 08.12.2022 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கே. பி. ஜானகி அம்மாள் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1917) (இ.1992)



வெ. தட்சிணாமூர்த்தி , இந்திய திரைப்பட இசையமைப்பாளர் (பி.1919) (இ.2013)



எ. கி. நாயனார் , இந்திய இடதுசாரி அரசியல்வாதி (பி.1919) (இ.2004)




சோனியா காந்தி , இத்தாலிய-இந்திய அரசியல்வாதி (பி.1946)



## இன்றைய நினைவு நாள்

சிவராம காரந்த் , கன்னட எழுத்தாளர் (பி.1902) (இ.1997)



சு. வில்வரத்தினம் , ஈழத்துக் கவிஞர் (பி.1950) (இ.2006)



## பன்னாட்டு ஊழலுக்கு எதிரான நாள்